**FACHSTELLE**
**FRÜHE KINDHEIT**
Postfach 1000
CH-8201 Schaffhausen
T +41 52 632 53 51
www.stadt-schaffhausen.ch
www.fk-stsh.ch

Fachstelle Frühe Kindheit

ஷாஃப்ஹவுசன், ஜனவரி 2024

**மொழித்திறன் மதிப்பீடு (Sprachstanderhebung) 2024**

அன்பார்ந்த பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு,

உங்களின் குழந்தை ஆகஸ்ட் 2025 இல் பாலர் பள்ளியைத் தொடங்குவார் (Kindergarten).ஒரு நல்ல தொடக்கத்திற்கு, உங்கள் குழந்தை ஆசிரியரைப் புரிந்துகொள்வதும் அவருடன் கலந்துரையாடுவதும் அவசியம். உங்கள் குழந்தை சிறு வயதிலேயே சுவிஸ் ஜெர்மன் அல்லது ஹை ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொண்டு, – மற்ற கு ழந்தைகளுடன் விளையாடும்போது உதாரணமாக விளையாட்டுக் குழு (Spielgruppe)அல்லது தினப்பராமரிப்பு மையத்திற்குச்(Kindertagesstätte) செல்லும்போது, உங்கள் குழந்தைக்கு கற்றுக்கொள்வதற்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் குழந்தை சிறந்த வாய்ப்புகளை பெற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், ஷாஃப்ஹவுசன் நகராட்சி இளம் குழந்தைகளைக் கொண்ட அனைத்து குடும்பங்களிலும் குழந்தைகள் எவ்வளவு நன்றாக ஜெர்மன் பேசுகிறார்கள் என்பதை ஆய்வு செய்கிறது. எனவே **31 ஜனவரி 2024** க்குள் கேள்வித்தாளை ஆன்லைனில் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கேள்வித்தாள் 14 மொழிகளில் கிடைக்கிறது.

ஏப்ரல் 2024 இல், உங்கள் குழந்தை ஜெர்மன் மொழியில் எவ்வளவு கற்றுக்கொண்டார் என்பதையும், அவர்களின் மொழித் திறமைக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதையும் நாங்கள் உங்களுக்குச் சொல்வோம். உங்கள் குழந்தையை எவ்வளவு சீக்கிரம் ஆதரிக்கிறீர்களோ, அவ்வளவு நல்லது!

**நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் சுவிஸ் ஜெர்மன் அல்லது ஹை ஜெர்மன் மொழியில் பேசுவீர்களா?** எதுவாக இருந்தாலும் கேள்வித்தாளை நிரப்பலாம் ஒவ்வொரு குழந்தையும் தனக்கென உரித்த பாணியில் தனக்குரிய வேகத்திலும் பேசக் கற்றுக கொள்கிறது. இந்த ஆய்வு உங்கள் குழந்தைக்கு உபயோகமாக இருக்கும்.

**காகித கேள்வித்தாளைப் பயன்படுத்த விரும்புகிறீர்களா?** நீங்கள் கேள்வித்தாளை வலைத்தளத்திலும் பதிவிறக்கம் செய்யலாம்
www.fk-stsh.ch இல் பதிவிறக்கவும்.

குறியீடு

STADT SCHAFFHAUSEN

**முக்கியமானவை**: பாலர் பள்ளிக்கான (Kindergarten) ஒதுக்கீட்டில் இந்த முடிவுகள் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. எந்த தனிப்பட்ட தகவலும் வெளியிடப்படாது அல்லது பகிரப்படாது மேலும் பல கேள்விகள் மற்றும் பதில்களை பின்பக்கத்தில் காணலாம்

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், கேள்வித்தாளை நிரப்புவதில் உங்களுக்கு உதவ நாங்கள் மகிழ்ச்சியடைவோம்
உங்கள் மதிப்புமிக்க ஒத்துழைப்பிற்கு மிக்க நன்றி!

தங்கள் உண்மையுள்ள



மிர்ஜாம் வோக்
குடும்ப உளவியலாளர்
தொலைபேசி +41 52 632 53 63
Mirjam.Vock@stsh.ch